ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2475/09 - 2026 පෙබරවාරි මස 10 වැනි අඟහරුවාදා - 2026.02.10

*2475/09 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 10 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்

25அ என்னும் பிரிவின் கீழான கட்டளை

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சர் கலாநிதி ஹரிணி அமரசூரிய ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பெனியொன்றாகவுள்ளதும், PV 3052 ஆம் பதிவிலக்கத்தைக் கொண்டதும் இல. 388, யூனியன் இடம், கொழும்பு 02 மற்றும் இல. 85, பிறேபுரூக் இடம், கொழும்பு 02 இல் அமைந்துள்ளதுமான "ஆசியா பசுபிக் இன்ஸ்டிடியூட் ஒப் இன்போமேஷன் டெக்னோலொஜி (பிறைவேட்) லிமிட்டெட்" தொடர்பில், மேற்கூறப்பட்ட சட்டத்தின் 70இ என்னும் பிரிவின் கீழான அறிக்கையொன்றைப் பெற்றுக்கொண்டு, இக்கட்டளை மூலமும் இதற்கான அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமையவும், இதற்கான அட்டவணை II இன் நிரல் I இல் குறித்துரைக்கப்பட்டதும் அதன் சுருக்கீடு இதற்கான அட்டவணை II இன் நிரல் II இலுள்ள நேரொத்த பதிவில் தரப்பட்டுள்ளதுமான பட்டத்தை அளிப்பதற்கு இட்டுச் செல்கின்றதாக "ஆசியா பசுபிக் இன்ஸ்டிடியூட் ஒப் இன்போமேஷன் டெக்னோலொஜி (பிறைவேட்) லிமிட்டெட்டின்" இனை உயர்கல்வியை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துக்காக அதனைப் பட்டம் அளிக்கின்ற நிறுவனமொன்றாக ஏற்றங்கீகரிக்கின்றேன்.

**அட்டவணை I**

நிபந்தனைகள்

1. (இதனகத்துப் பின்னர் "நிறுவனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஆசியா பசுபிக் இன்ஸ்டிடியூட் ஒப் இன்போமேஷன் டெக்னோலொஜி (பிறைவேட்) லிமிட்டெட் ஆனது, குறைந்தபட்சம் 120 திறமை மதிப்பீடுகளுடன், சைபர் பாதுகாப்பில் விஞ்ஞான இளமாணி சிறப்பு (இலங்கை தகைமை கட்டமைப்பு மட்டம் 06) மற்றும் மென்பொருள் பொறியியலில் விஞ்ஞான இளமாணி சிறப்பு (இலங்கை தகைமை கட்டமைப்பு மட்டம் 06) தொடர்பில் இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்ட நிகழ்ச்சித்திட்டத்துக்கு மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளும் போது, பின்வரும் குறைந்தபட்ச நுழைவுத் தகைமைக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்;



*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(அ) இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க.பொ.த. (உயர் தரத்தில்) பௌதீக விஞ்ஞான பாடத்துறையில் அல்லது பொறியியல் தொழினுட்ப பாடத்துறையில் ஒரே மற்றும் அதே அமர்வில் மூன்று (03) சாதாரண சித்தி (S) அல்லது அதற்குச் சமமான தகைமைகள்; அல்லது

(ஆ) இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க.பொ.த. (உயர் தரத்தில்) ஏதேனும் பாடத்துறையில் ஒரே மற்றும் அதே அமர்வில் குறைந்தபட்சம் மூன்று (3) சாதாரண சித்திகள் (S) அல்லது அதற்குச் சமமான தகைமைகள் மற்றும் இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க.பொ.த. (உயர் தரத்தில்) ஏதேனும் அமர்வில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்பத்தில் சாதாரண சித்தி (S) அல்லது அதற்குச் சமமான தகைமைகள் அத்துடன் இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க.பொ.த. (சாதாரண தரத்தில்) கணிதப் பாடத்தில் திறமைச் சித்தி (C) அல்லது அதற்குச் சமமான தகைமைகள்; அல்லது

(இ) இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க.பொ.த. (உயர் தரத்தில்) ஏதேனும் பாடத்துறையில் ஒரே மற்றும் அதே அமர்வில் குறைந்தபட்சம் மூன்று (3) சாதாரண சித்திகள் (S) அல்லது அதற்குச் சமமான தகைமைகள் அத்துடன் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க.பொ.த. (சாதாரண தரத்தில்) கணிதப் பாடத்தில் திறமைச் சித்தி (C) அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகார சபையினால் அங்கீகரிக்கப்பட்ட இணைப்பு நிகழ்ச்சித் திட்டமொன்றுடன் அதற்குச் சமமான தகைமைகள்.

2. இந்நிறுவனமானது இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தினை இல. 388, யூனியன் இடம், கொழும்பு 02 மற்றும் இல. 85, பிறேபுரூக் இடம், கொழும்பு 02 இல் மாத்திரமே நடாத்துதல் வேண்டும்.

3. ஆசியா பசுபிக் இன்ஸ்டிடியூட் ஒப் இன்போமேஷன் டெக்னோலொஜி (பிறைவேட்) லிமிடெட் ஆனது, குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் நடாத்தப்படும் ஐந்து (5) ஆண்டு மீளாய்வுக்கு அமைய இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்டத்தை வழங்குவதற்கு ஏற்றங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.

**அட்டவணை II**

| *நிரல் I*<br>*பட்டம்* | *நிரல் II*<br>*பட்டத்துக்கான சுருக்கீடு* |
|---|---|
| சைபர் பாதுகாப்பில் விஞ்ஞான இளமாணி சிறப்பு | பீஎஸ்சீ சிறப்பு (சைபர் பாதுகாப்பு) |
| மென்பொருள் பொறியியலில் விஞ்ஞான இளமாணி சிறப்பு | பீஎஸ்சீ சிறப்பு (மென்பொருள் பொறியியல்) |

கலாநிதி **ஹரிணி அமரசூரிய,**
கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி
அமைச்சர்.

கொழும்பு,
2026, சனவரி 27.

EOG 02 - 0080

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.